2014 ஆகஸ்ட் 1]

செல்ல ரெயின்கோட் 2 கோடி ரூபாய் செலவிலும், குளிர் காலங்களில் உடல் நலத்தைக் காக்க 1 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் கம்பளிச் சட்டையும் வழங்கிட அறிவிக்கப்பட்டது. மக்களின் சக்தியே நீங்கள்தான் அம்மா! மக்களின் வெற்றியே நீங்கள்தான் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) எடுத்த காரியம் அனைத்திலும் வெற்றிதான் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) 2016-லும் உங்களுக்கு வெற்றிதான் அம்மா! வெற்றி, வெற்றி என்று சொல்லி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், இன்றையதினம் கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் வேண்டுமென்று கேட்டதற்கு, கட்டித் தரப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியையும், வணக்கத்தையும் கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 311, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

311—

விற்பனை நிலையம்

***18863—திரு. எம்.கே. அசோக்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, விஜயநகரம் பகுதியில் கைத்தறி விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, விஜயநகரம் பகுதியில் கைத்தறி விற்பனை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள்.

வேளச்சேரிக்கு அருகில் 4 கிலோ மீட்டர் தொலைவில் அடையாரிலும், 6 கிலோ மீட்டர் தொலைவில் தாம்பரத்திலும் கைத்தறித் துணிகளை விற்பனை செய்யும் முதன்மை கூட்டுறவுச் சங்கமான கோ-ஆப்டெக்ஸின் இரண்டு விற்பனை மையங்களும் இயங்கி வருகின்றன. வேளச்சேரி பகுதியில் கட்டடங்களின் வாடகை ஒரு சதுர அடிக்கு 50 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை உள்ளது. இப்படி அதிக வாடகை செலுத்தி, விற்பனை மையம் இலாபத்துடன் இயங்க வாய்ப்புக் குறைவாக உள்ள சூழ்நிலையில், வேளச்சேரி தொகுதிக்குட்பட்ட விஜயநகரம் பகுதியில் கைத்தறி விற்பனை மையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.*

திரு. எம்.கே. அசோக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், தமிழகத்தில் இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்று அல்லும் பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கும் தங்கத் தாரகை, தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி பகுதி வளர்ந்து வரும் வணிகப் பகுதியாக இருப்பதாலும், மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியாக இருப்பதாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வேளச்சேரி பகுதியில் அரசு அலுவலகக் கட்டடங்களில் விற்பனை நிலையங்களைத் தொடங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து, அவர் சொல்கின்ற அந்த விஜயநகரம் பகுதி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியாக இருந்தால், குறைந்த வாடகைக்கு மாநகராட்சிக் கட்டடத்திலோ அல்லது அது

ஊராட்சிப் பகுதியாக இருந்தால், குறைந்த வாடகைக்குக் கட்டடங்களை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடையாளம் காட்டி தேர்வு செய்து கொடுத்தால், கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் துணிகளை விற்கக்கூடிய கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலமாகவோ அல்லது கைத்தறி சொசைட்டி மூலமாகவோ விற்பனை நிலையம் ஆரம்பிக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.

திரு. எம்.கே. அசோக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி தொகுதி, விஜயநகரம் பகுதி சென்னை மாநகராட்சியின் 178-வது வார்டில் அமைந்திருப்பதால், அந்தப் பகுதியில் கைத்தறி விற்பனை நிலையம் அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வந்தால், அதற்கான தக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி வார்டு எண் 178-க்கு உட்பட்ட பகுதியில் விஜயநகரம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். துறை அதிகாரிகளை நேரடியாக அப்பகுதிக்கு அனுப்பி, ஆய்வு செய்து, குறைந்த வாடகைக்குக் கட்டடம் கிடைக்கக்கூடிய சூழ்நிலையிருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி, வளர்ந்து வரக்கூடிய அந்தப் பகுதியில் மக்களின் பயன்பாட்டுக்காக கைத்தறி விற்பனை நிலையம் ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 312, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.